## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

### Judicial Magistrate Court At Oddanchatram

| Case Type | No | Year | |
|---|---|---|---|
| CC | 518 | 2016 | |
| சா.ப. எண் | அ.த.சா. எண் | சாட்சியின் பெயர்: | வயது |
| LW | PW1 | குப்பாத்தாள் | |
| க/பெ/தந்தையின் பெயர் | | ஈஸ்வரசாமி | |
| முகவரி: | | | |
| Religion / Caste : | | *HINDU/CRISTIAN/MUSLIM/OC/ BC/MBC/ SC/ST* | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 25/03/2021

அரசு தரப்பில் முதல் விசாரணை

**நான் வடுகவலசில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் 1 முதல் 3 வரையிலான எதிரிகளை எனக்கு தெரியும். 1ம் எதிரி முத்துச்சாமி எனக்கு சித்தப்பா ஆவார். 2ம் எதிரி கதிர்வேல் தம்பி உறவு வேண்டும். 3ம் எதிரி வள்ளியாத்தாள் எனக்கு சித்தி உறவு ஆகும். எங்களுக்கும் எதிரிகள் தரப்பினருக்கும் வடுகவலசில் உள்ள நிலத்தில் உள்ள கிணறு சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. எங்களை கிணற்றிலிருந்து தண்ணீர் ஓட்ட விடாமல் அடிக்கிறார்கள். 2015ம் வருடம் தேதி எனக்கு மறந்துவிட்டது. தோட்டத்திற்கு சாயந்தரம் 4.00மணியளவில் தண்ணீர் எடுத்துவிட நான் மட்டும் தான் சென்றிருந்தேன். மேற்படி தோட்டத்தில் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் இருந்தார்கள். என்னை தண்ணீ எடுத்துவிடுவதற்கு என்னை அவர்கள் விடவில்லை. உடனடியாக நான் வீட்டிற்கு வந்துவிட்டேன்.வீட்டிற்கு நான் வந்தவுடன் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் மறுபடி 6.00மணிக்கு வீட்டிற்கே வந்துவிட்டார்கள்.அப்போது வீட்டில் எனது கணவர் இல்லை. வீட்டை விட்டு வெளியே வந்த என்னை எதிரி முத்துச்சாமி கம்பால் என்னை தலையில் அடித்தும் எனது சேலையை பிடித்து இழுத்தும் சண்டை போட்டார். அப்போது அருகே இருந்த கந்தசாமி மற்றும் சுப்பிரமணி ஆகியோர்களில் கந்தசாமி எதிரிகள் அடிப்பதிலிருந்து குறுக்காட்டினார். சுப்பிரமணி தலையில் ரத்தத்துடன் நான் மருத்துவமனைக்கு சென்ற போது உடன் வந்தார். வள்ளியாத்தாளும், கதிர்வேலும் சும்மா என்னை அடித்தார்கள். முத்துச்சாமி என்னை கட்டையால் அடித்தார். வேறு எதுவும் எதிரிகள் செல்லவில்லை. கந்தசாமிகுறுக்காட்டியுடன் அவர்கள் ஓடிவிட்டார்கள் எனது வீட்டுக்காரர் வந்தவுடன் மருத்துவமனைக்கு வந்தேன். எனது மாமியார் திருமாத்தாளும் வந்துவிட்டார். புகார் வாக்குமூலத்தில் உள்ள**

**குப்பாத்தாள் என்ற கையெழுத்து என்னுடையது தான்.கள்ளிமந்தையம் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்துவிட்டு தான் மருத்துவமனைக்கு வந்தேன். நான் காவல்நிலையத்திற்கு சென்று அங்கிருந்த போது எனது அக்கா மகன்களான நல்லுச்சாமி மற்றும் இரண்டு , மூன்று பேர் வந்துவிட்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

**போலீசார் விசாரணை செய்த போது புகாரை காவல்நிலையம் வந்து கொடுத்துவிட்டு தான் மருத்துவமனைக்கு சென்றேன் என்ற சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையம் சென்ற போது எனது அக்கா மகன் நல்லச்சாமி மற்றும் இரண்டு, மூன்று பேர் காவல்நிலையத்திற்கு பின்னாலேயே வந்தார்கள் என்ற சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலீசார் என்னை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து அன்றைய தினம் மாலை 7.00 மணிக்கு விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையின் போது எனது கணவர் வந்து மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக சொல்லும் சங்கதியை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது அக்கா மகன் நல்லச்சாமி நாங்கள் புகார் கொடுத்துவிட்ட வெளியில் வந்தபோது தான் காவல்நிலையத்திற்கு வந்தார் என்று சொன்னால் சரிதான். மருத்துவமனைக்கு நான் சிகிச்சைக்கு சென்ற போது சுயநினைவுடன்தான் இருந்தேன் என்றால் சரிதான். சிகிச்சை அளித்த மருத்துவரிடம் மூன்று நபர்கள் என்னை தாக்கியதாகதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சண்டை நடந்ததாக சொல்லும் இடத்தில் கந்தசாமி என்பவர் மட்டும் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகாரிலும் போலீசார் விசாரணையிலும் நான் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் சுப்பிரமணி என்பவரும் வந்தார் என்ற சங்கதியை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சண்டை நடந்ததாக சொல்லும் இடமானது எனக்கு சொந்தமான வீட்டின் வாசல் பகுதி என்றால் வசல் பகுதிக்கு முன்னால் உள்ள வீதியில் நடந்தது. அ.த.சா.ஆ.1 புகாரை யார் எழுதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.எனது வீட்டுக்காரர் எழுதி நான் அதில் கையெழுத்து செய்தேன். எனது வீட்டுக்காரர் யாரை வைத்து புகாரை எழுதினார் என்று எனக்கு தெரியாது என்றால் எனது வீட்டுக்காரர் தான் எழுதினார். 1ம் எதிரி முத்துச்சாமி எனது சேலையை பிடித்து இழுத்து எந்த தகராறும் செய்யவில்லை என்றால் சரியல்ல. முத்துச்சாமி என்னை கட்டையாலோ கம்பாலோ அடிக்கவில்லை என்றால் சரியல்ல. மற்ற எதிரிகளும் என்னை அடிக்கவில்லை என்றால் சரியல்ல. முத்துச்சாமி தரப்பினர் என் மீது நான் அவர்களை அடித்து, மிரட்டியதாக புகார் ஒன்று கொடுத்து வழக்கு பதிவுசெய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அந்த வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி கிணறு சம்பந்தமாக நான் உரிமம் கொண்டாடி கோட்டாட்சியரிடம் புகார் கொடுத்து அந்த புகார் தள்ளுபடி**

செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த புகார் நிலுவையில் தான் உள்ளது. சிவில் வழக்கில் ஆதாயம் அடைய வேண்டி எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கின் புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.வேறு எங்கோ எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் அடித்தாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் சொன்னது போன்று எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் மீது பதிவுசெய்யப்பட்ட குற்ற வழக்கலிருந்து தப்பிக்க வேண்டி இந்த வழக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

(sd) Kuppathal
Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

(sd). R.Pandy

Judicial Magistrate
Oddanchatram.
Date : 25/03/2021